பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

33 ] சென்னை—ஞாயிறு, நவம்பர் 24, *1946.* [ விலை அணா 2

## கிராமக் கைத்தொழில்கள்

விஷயங்களை ஆழ்ந்து யோசிக்கும் ஒரு நண்பர் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாக கீழ்கண்டவாறு எழுதி இருக்கிறார் :—

"தாங்கள் கூறும் யோசனைகளெல்லாம் நல்லவைகளாகவே இருக்கின்றன. ஆனால் அந்த யோசனைகளை வற்று நடத்த வேண்டுமானால் ஜனங்களிடம் சன்மார்க்க உணர்ச்சி அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் சாதாரணமாக மனிதர்களுடைய நடத்தைகளெல்லாம் அவசியத்தைப் பொறுத்தும் சுயநலத்தைப் பொறுத்துமே நடைபெற்று வருகின்றன. ஆதலால் சன்மார்க்க உணர்ச்சியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்படும் எந்தப் பொருளாதாரத் திட்டமும் வெகு நாளைக்கு நிலைத்து நிற்க மாட்டாது. இத்தனை வருஷங்களாக எவ்வளவோ முயற்சிகள் செய்து வந்தும் இன்னும் கதர் திட்டமானது அதிகமான பயனைக் காட்டி விடவில்லை. அதற்குக் காரணம் உங்களுடைய ஊழியர்களும், பிரிட்டிஷ் வியாபாரிகளும், மில் முதலாளிகளும் ஜவுளி வியாபாரிகளும் மனிதனுடைய முக்கியாம்சமாக இருக்கும் சுயநலத்தைப் பொறுத்தே தங்கள் காரியங்களைச் செய்து வருவதுதான்.

மனிதர்கள் உண்மையையும் நாணயத்தையும் கடைப் பிடித்தே நடக்கக் கூடிய சமூகத்தை ஏற்படுத்த வேணடுமென்றே நானும் விரும்புகின்றேன். ஆனால் வியாபார உணர்ச்சியையும் லாப லட்சியத்தையும் அறவே ஒழித்துவிடும் வரை அத்தகைய சமூகத்தை அமைப்பதென்பது சாத்தியமில்லை. இப்பொழுது உணவு போக்குவரத்து போன்ற பல விஷயங்களில் சர்க்கார் கட்டுப்பாடு ஏற்படுத்தியிருக்கிறார்கள். பெரிய முன்னேற்றமான காரியங்களைச் செய்வதற்கு இது தக்க சமயமாகும்.

பம்பாய் சர்க்கார் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாக ஒரு கமிட்டி ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதில் திரு. மனுசுபேதாரும், திரு. லக்ஷ்மிதாஸ் அஸாரும். திரு. தோத்ரேயும் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்.

என்னுடைய திட்டம் வருமாறு :—

ஒரு கிராமத்தையோ அல்லது இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்தோ ஒரு வட்டமாக வைத்துக் கொண்டு அதன் ஜனத் தொகையை குழந்தைகள் பெண்கள், வயதானவர்கள், உடல் பலம் உள்ளவர்கள், ஆரோக்கியமுள்ள இளைஞர்கள் என்று பிரிக்க வேண்டும். அதன் பிறகு ஒழுங்காக வேலைக்கு வர முடியாதவர்கள், வருஷ முழுவதும் வேலை செய்ய முடியாதவர்கள், வேலை செய்வதற்கு வேண்டிய சாதனங்களோ சாமர்த்தியமோ இல்லாதவர்கள் என்று பிரிக்க வேண்டும்.

களைப்பு உண்டாக்காத வேலையாயிருந்தால் குழந்தைகள் தினந்தோறும் மூன்று நான்கு மணிநேரம் சுலபமாக வேலை செய்ய முடியும். மீதியுள்ள நேரத்தில் அவர்கள் பள்ளிக்கூடம் சென்று படிக்கலாம்.

வேலை ஆரம்பமாகும் தினத்திலிருந்து குழந்தைகளுக்குத் தினந்தோறும் *1* அணா வீதமும் பெரியவர்களுக்கு 4 அணா வீதமும் கூலி கொடுக்க வேண்டும். அதிகத் திறமை வந்த பிறகு குழந்தைகளுக்கு 5 அணா வரையிலும், பெரியவர்களுக்கு 8 அணா வரையிலும் கூலியை உயர்த்தலாம்.

ஒரு கிராமத்தில் ஒரு வகையான பொருளைத் தான் உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இரண்டு மாத காலத்தில் திறமை அடைந்து விடுவார்கள். தவறுகள் செய்வது நின்று போகும். உற்பத்தி செய்யும் பொருள் உற்பத்தி செய்யும் இடத்திலேயே உபயோகப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். சர்க்கார் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களைக் கொண்டு போய் கொடுக்கவும் வேலை செய்பவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு இரண்டு மூன்று நிபுணர்களை நியமிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். சர்க்கார் உற்பத்தியாகும் பொருள்களை ஜனங்கள் வாங்கி உபயோகிக்கும்படி பிரசாரம் செய்யவேண்டும். ஜனங்களுக்கு மலிவாகக் கிடைக்கும்படியான முறையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த விதமாக உற்பத்திசெய்தால் அநேக பொருள்களை பெரிய மில்களில் உற்பத்தி செய்வதை விட குறைந்த விலைக்கு உற்பத்தி செய்ய முடியும் அதற்கான காரணங்களில் ஒன்று கூலியில் மிச்சப்படுவதாகும். அப்படி மிச்சப்படுவதை வேலை செய்வோருடைய நன்மைக்காக செலவு செய்ய வேண்டும். உடல் பலமுள்ளவர்கள் நாளுக்கு நாள் அதிகமாக விவசாயம் ரயில்வே போன்ற வேலைக்குப் போய்விடுகிறார்கள். அதனால் குறைந்த தொகையினரே கிராமக் கைத்தொழில்களைச் செய்கிறார்கள். உற்பத்தியும் குறைந்து விடுகிறது. ஆனாலும் பாதகமில்லை.

இந்தத் திட்டத்தை அனுசரித்தால் கோடிக்கணக்கான மக்களுடைய வருமானம் அதிகப்படும். அதன் காரணமாக அவர்கள் சுயமரியாதைக்குப் பங்கமின்றி காலம் தள்ளமுடியும். இது சமூக இன்ஷூரன்ஸ் திட்டமாகும். இந்தத்திட்டம் நம்முடைய இந்திய பண்பாட்டிற்கு ஒத்ததாகும். 35-வருஷ அனுபவத்தைக்கொண்டே இதைவகுத்திருக்கிறேன். இந்தத் திட்டத்தை நடத்தினால் எவ்விதப் பயிற்சியும் விசேஷத் திறமையும் இல்லாதவரும் கூட ஒரு விதமாக ஜீவனம் செய்யமுடியும். அதிகமாக சம்பாதிக்க விரும்புகிறவர்கள் அதிக ஊதியம் தரக்கூடிய வேலைகள் கிடைத்தால் அவற்றில் ஈடுபடலாம். ஆனால் யாரும் வேலை இல்லையே என்று திண்டாட வேண்டிய அவசியமில்லை.

குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலமாக தொழிலும் கற்றுக் கொள்வார்கள், படிப்பும் கற்றுக் கொள்வார்கள்.

என்னுடைய திட்டத்தின் முக்கியமான சில அம்சங்கள் இவை :—

நமது நாட்டில் வேலைத்திறமை இல்லாவர்கள் அதிகம். அவர்களுக்கு என் திட்டத்தின் மூலம் போதிய திறமை யுண்டாகும்.

போக்கு வரத்து, கணக்கு வைத்தல், சாமான்களைச் சேர்த்துவைத்தல் முதலிய காரியங்கள் என் திட்டப்படி அரசாங்கமே நடத்தும். அதனால் சாதாரணமாக நம்முடைய வாழ்வில் காணப்படும் வியாபார நோக்கம் முற்றிலும் ஒழிந்து போகும்.

இந்தத் திட்டத்தின்படி ஒரு கோடிப் பேர் வேலைசெய்தால் அவர்களுக்குத் தினந்தோறும் 25-லக்ஷ ரூபாய் கிடைக்கும். அதனால் அவர்கள் வாழ்வில் புதிதாக உற்சாகம் பெறுவார்கள். இப்பொழுது வேலை செய்யாமல் இருப்பவர்கள் என் திட்டப்படி வேலை செய்தால் வருஷந்தோறும் இரண்டுகோடி ரூபாய் பெறுமான பொருள் உற்பத்தி செய்து விடுவார்கள்.

சர்க்காரே மூலப்பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களிட மிருந்து வாங்குவதால் மலிவான விலைக்கு வாங்கமுடியும். சர்க்கார் உற்பத்திச் செலவு மட்டுமே கொடுத்து வாங்கமுடியும்.

ஏதேனும் நிபுணருடைய உதவி தேவைப்படும் பிரச்னை எழுந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு அவரை நியமித்து அவருக்கு ஊதியம் கொடுக்கலாம்.

கணக்கு எழுதுகிறவர்கள், சாமான்கள் வைத்திருக்கும் ஸ்டோர்களை பார்த்துக் கொள்கிறவர்கள் முதலியவர்களைக் கொண்டே குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யலாம.

இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தால் உபாத்தியாயர் பெரிய பையன்களுக்கும் பெரிய பையன்கள் சிறிய பையன்களுக்குமாக கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யலாம்.

இந்த உபாத்தியாயர் சதாரணமாக உபயோகிக்கப்படும் ஐம்பது மருந்துகளை வைத்துக்கொண்டு கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு மிகவும் மலிவான விலைக்கு விற்கலாம். உதாரணமாக டிஞ்சர் அயோடின் போன்றஇங்கிலீஷ்மருந்துகளும், கடுக்காய் போன்ற ஆயுர்வேத மருந்துகளும் இப்படி வைத்துக்கொண்டு கொடுக்கலாம். இந்த மருந்துகளைச் சர்க்காரே ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

சாதாரணமாக தினசரி உபயோகத்துக்கு வேண்டிய கீழ்க்கண்ட பொருள்களை என்னுடையத் திட்டப்படி கிராமங்களில் எளிதாக உற்பத்தி செய்யலாம்:—

| | |
|---|---|
| துணி | செருப்பு |
| கடுதாசி | பாத்திரங்கள் |
| பென்ஸில் வகை | கயறுகள் |
| ஊசிவகை | பொம்மைகள் |
| சோப்பு | கட்டில் |
| தீக்குச்சி | சீப்பு |
| தகரடப்பா | கத்திகள் |
| மஸாலாபொடி | தோல் சாமான்கள் |
| அப்பளம் | மை |
| மண்பாண்டம் | சங்கீதக் கருவிகள் |
| பித்தான் | பௌண்டன்பேனா |
| கண்ணாடி வளையல் | சைக்கிள் |
| புஸ்தக பைண்டிங் | கடியாரம் |
| ஆணிகள் | பனியன் |
| வெல்லம் | மெழுகு திரி |
| தைலங்கள் | கண்ணாடி |
| பினாயில் | அரக்கு |
| தொப்பிகள் | கோந்து |
| | மரச்சாமான்கள் |

என் கருத்து:—

மேற்கண்ட கடிதம் மிகக் கவர்ச்சியுடையதாக இருக்கிறது. கவனமாக ஆராயத்தகுந்த தாகும். ஆனால் இந்தத் திட்டம் சம்பந்தமாக எனக்கு இரண்டு கஷ்டங்கள் தோன்று கின்றன. ஒன்று கையினால் செய்யும் பொருள்களை மெஷினில் செய்யும் சாமான்களைப்போல மலிவாக விற்க முடியுமா என்பதாகும். ஆனால் கிராமத்திலுள்ள ஜனங்கள் போதிய திறமை பெற்று விட்டால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் நகரங்களில் சுலபமாக விற்று விடும்.

மற்றொரு கஷ்டம் யாதெனில் இந்தத் திட்டத்தில் கைத்தொழிலும் கல்வியும் தனித் தனியாக பிரித்தே பேசப்பட்டிருக்கின்றன. அப்படிப் பிரிக்காமல் கைத்தொழில் மூலமாகக் கல்வி போதிப்பதே சரியான முறையாகும்.

மோ. க. காந்தி.

## உத்தமமான பிராணத்தியாகம்

காந்தியடிகள் வங்காளத்துக்குப் புறப்படு முன் டெல்லியிலிருந்த பொழுது நண்பர் ஒருவர் கல்கத்தாவில் நடந்த அக்கிரமங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார். அந்த நண்பர் கூறியதாவது :—

"என்னுடைய மனதை வேதனைப் படுத்துவது அங்கே உயிர்ச் சேதம் ஏற்பட்டிருப்பதன்று, மனிதப் பண்பு மறைந்துபோய் விட்டதேயாகும். வகுப்புவாத உணர்ச்சி இல்லாதவர்கள் கூட வகுப்புவாத உணர்ச்சி உடையவர்களாக ஆகி வருகிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப் பைத்திய வெறி பரவியும் வருகிறது."

கல்கத்தாவில் நடந்த காரியங்களைக் கேட்டுக் கொண்டே இருந்த காந்தியடிகள் இறுதியில் கூறியதாவது :—

"நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இங்கிருந்து சேவாகிராமத்துக்கு போவதில்லை என்றும் வங்காளத்துக்கே போவதென்றும் தீர்மானித்து விட்டேன். அங்கு போகாமல் இங்கிருந்தால் என் கொள்கை என்னாவது?"

சம்பாஷணையின் இடையில் நண்பர் ஒருவர் காந்தியடிகளைப் பார்த்து,

"வங்காளத்தில் பரவிவரும் இந்த வகுப்பு வாதப் பேயாட்டத்தைத் தடுப்பதற்காக உண்ணா விரதத்தை மேற்கொள்ளலாமா?" என்று கேட்டார். அதற்கு காந்தியடிகள் கூறியதாவது :—

"அது கூடாது. ஆமதாபாத்தில் உள்ள சிறந்த நண்பர் ஒருவர் நான் ஆமதாபாத்துக்கு வந்து பிராணத்தியாகம் செய்ய வேண்டு மென்று அழைத்திருக்கிறார். 'நாங்கள் அஹிம்ஸையை நம்பிய போதிலும் அதற்கு வேண்டிய பல மில்லாதவர்களா யிருக்கிறோம். நீங்கள் வந்து அனுஷ்டித்துக் காட்டினால் எங்கள் நம்பிக்கை உறுதியடையும், நாங்கள் பலம் பெறுவோம்,' என்று எழுதி இருக்கிறார். அவருடைய வாதம் முற்றிலும் சரியான தாகும். எனக்கு அப்படிப்போய் பிராணத்தியாகம் செய்ய வேண்டு மென்ற ஆசையும் உண்டாயிற்று. ஆனால் அதைத் தடுத்துக்கொண்டேன். அந்தராத்மா பிராணத்தியாகம் செய்யும்படி ஆணையிடவில்லை. ஆணையிட்டால் என்னை யாரும் தடுக்க முடியாது. நான் அதைப்பற்றி

என்னுடன் பல விதமாக விவாதித்தேன். அந்த விவாதங்களைக் கூற வேண்டிய அவசியமில்லை. ஜனங்கள் விரும்பினால் என்னை ஒரு கோழை என்று சொல்லிக் கொள்ளட்டும். பிராணத்தியாகம் செய்ய வேண்டிய சமயம் வந்தால் பிராணத்தியாகம் செய்வதற்கு வேண்டிய பலத்தை கடவுள் அருள்வார்.

### சிலுவை காட்டும் வழி

உண்ணு விரதத்தை முன் பின் யோசியாமல் மேற்கொள்ளலாகாது அது ஒரு பலம் பொருந்திய சாதனம். விஷயமறியாமல் கையாண்டால் அபாயம் உண்டாக்கும். மனத்திலேனும் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு மரணத்தை ஏற்றுக் கொள்வதற்கு எவ்வளவு ஆன்மத் தூய்மை வேண்டுமோ அதை விட அதிகமான பரிபூர்ணமான ஆன்மத்தூய்மை தேவையாகும். உலகத்தை உய்விக்க அத்தகைய பிராணத்தியாகம் ஒன்று ஏற்பட்டாலும் போதும். ஏசுவின் பிராணத்தியாகம் அத்தகையதாகும்.

கிறிஸ்தவர்கள் ரொட்டியையும் ஒயினையும் ஏசுவின் தசையாகவும் ரத்தமாகவும் எண்ணி உண்பதன் பொருள் அவரைப்போல் தாமும் பிராணத்தியாகம் செய்ய தம்முடைய மனத்தை தயாராக்கிக் கொள்வதேயாகும். முற்றிலும் நிரபராதியான ஒருவர் தம்முடைய பகைவர்கள் உள்பட சகல மக்களுடைய நன்மைக்காக தம்மை பிராணத்தியாகம் செய்தார். அது பரிபூர்ணமான ஒரு செயலாகும். என் காரியம் முடிந்தது என்று ஏசு இறுதியில் கூறியதாக அவருடைய நான்கு சிஷ்யர்களும் சான்று கூறுகின்றார்கள். அந்த விதமாக நடந்ததோ இல்லையோ அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை நான் சம்பந்தப்பட்ட மட்டில் நான் அதை சரித்திரம் கூறும் சம்பவங்களை விட அதிக உண்மையானதாகவே கருதுகின்றேன். அத்தகைய பிராணத்தியாகம் சாத்தியமானதென்றே கருதுகின்றேன் அது சாசுவதமான ஒரு நீதியைப் புலப் படுத்துகின்றது. நிரபராதிகள் தியாகம் செய்து பிறர்க்கு நன்மை உண்டாக்க முடியும் என்பதே அந்த நீதி.

ஏசுவின் போதனையை எப்படி இந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றிக் கூறுகின்றேன். பம்பாயில் அக்கிரமங்கள் நடந்தபொழுது ஹிந்து ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டோமென்று சொல்லி ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு வெறி பிடித்த ஜனங்களின் கோபா வேசத்திற்கு ஒன்றாக இரையானார்கள். அது போலவே ஆமதாபாத்தில் அக்கிரமங்கள் நடந்த பொழுது அதைத் தடுப்பதற்காகச் சென்று ரஜாபலியும் பஸந்தராவ் ஹெகிஸ்த்தேயும் பிராணத்தியாகம் செய்தார்கள். அதனால் என்ன பலன் ஏற்பட்டு விட்டது, இன்னும் கலகத்தீ அணையவில்லையே என்று கேட்கக் கூடும். ஆனால் அந்தப் பிராணத்தியாகம் வீண் போகவில்லை என்றே நான் எண்ணுகின்றேன். அதன் பலன் இன்று நம்முடைய கண்ணுக்குப் புலனாகாமலிருக்கலாம். இன்னும் நம்முடைய அஹிம்ஸை பரிசுத்தமானதாக ஆகிவிடவில்லை. அது நொண்டி நொண்டித்தான் நடந்து போகின்றது. ஆயினும் சிறிதளவு புளித்தமா அதிகமான மாவை புளிக்கும்படி செய்வது போல நம்முடைய அஹிம்ஸையும் கண்ணுக்குப் புலனாகாத விதத்தில் வேலை செய்து கொண்டே இருக்கிறது. கண்ணுக்குப் புலனாகாததால் அநேகருக்கு அது அர்த்தமாகாது. ஆனால் அது தான் அதன் இயல்பு. இன்னும் சம்பாரனில் நடந்த சத்தியாக்கிரகத்தையும் ஞாபகப்படுத்திப்பாருங்கள். அங்கே நீலித்தோட்டங்களில் நடந்து வந்த அக்கிரமங்களை எதிர்த்து, ஐம்பது வருஷ காலத்தில் பல முறை பலாத்காரப் புரட்சிகள் ஏற்பட்டன. ஆனால் அவற்றின் பலனை கூலி வேலை செய்தவர்களுடைய விலங்குகள் இறுகினவே யன்றி தளரவில்லை. ஆனால் பொது ஜன சத்தியாக்கிரகம் ஆறு மாத காலம் நடந்ததும் நூறு வருஷ காலமாக இழைக்கப் பட்டு வந்த அநீதி அடியோடு ஒழிந்து விட்டது. அதற்குக் காரணம் சத்தியாக்கிரகம் ஹிம்ஸைக் கலப்பு கொஞ்சம் கூட இல்லாமல் நடந்து வந்ததேயாகும்.

ஆதலால் நீங்கள் மூவரும் தைரியமாகச் செல்லுங்கள். நான் உங்களை ஆசீர்வதிக்கின்றேன். நீங்கள் கொல்லப்பட்டு விட்டதாக நாளைச் செய்தி வந்தால் நான் துக்கப்படமாட்டேன். சந்தோஷமே அடைவேன்"

அதற்கு அந்த மூவரும் 'ஆம் அப்படிக் கொல்லப் படுவது பரமானந்தமேயாகும்" என்று கூறினார்கள்.

அப்பொழுது காந்தியடிகள் "ஆனால் நான் சொல்வதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ வீரம் என்று எண்ணி முட்டாள்த் தனமாக அதில் இறங்கி விடக் கூடாது. பிராணத்தியாகம் செய்ய வேண்டுமென்று மனப்பூர்வமான ஆவல் உங்களைத் தூண்டினாலன்றி நீங்கள் அதைச் செய்யக் கூடாது. நான் சொல்கிறேன் என்று சொல்லி நீங்கள் செய்து விடக் கூடாது" என்று சொன்னார்.

அதற்கு அவர்கள் "ஆமாம் அது சொல்லத் தேவையில்லை" என்று பதில் சொல்லி விட்டு, விடை பெற்றுக் கொண்டார்கள்.

பியாரேலால்.

## காரணம் யாது?

காந்தியடிகள் நோவகாளிக்குப் புறப்படுமுன் அவ்விடம் வந்திருந்த முஸ்லிம் நண்பர் ஒருவர் :—

" நீங்கள் நோவகாளிக்குப் போக விரும்புகிறீர்களே அங்கு நடந்ததைவிட அதிகக் கேவலமாக ஆமதாபாத், பம்பாய் முதலிய இடங்களில் நடந்தனவே. நோவகாளியில் கஷ்டப்படுகிறவர்கள் ஹிந்துக்கள் என்பதனால் தானே அங்கே போகிறீர்கள். அத்துடன் தாங்கள் அங்கு போவதால் நிலைமை அதிக மோசமாய் விடாதா?" என்று கேட்டார்.

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் :— "எனக்கு ஹிந்து முஸ்லிம் என்ற வேற்றுமை கிடையாது. நோவாகாளியில் போல் நடந்திருந்தாலும், போனால்தான் நல்லது என்று தோன்றினாலும் அங்கும் போயிருப்பேன். என்னை நோவகாளிக்குப் போகும்படி தூண்டுவது பெண் மக்கள் மானபங்கம் அடைந்திருப்பதே யாகும். நேரில் போய்ப் பார்த்தால்தான் விஷயம் விளங்கும். என்னுடைய அஹிம்சா தர்மம் எவ்வளவு தூரம் இந்த நெருக்கடிக்கு உதவும் என்பது இனித்தான் காண வேண்டும். உதவாமற் போனால் நானே அதை பகிரங்கமாகக் கூறுவேன். நிலைமை சரிப்படும் வரை நான் வங்காளத்திலேயே தங்கி யிருக்க முடிவு செய்திருக்கிறேன். அவசியமானால் உயிர் துறக்கவும் சித்தமா யிருக்கிறேன். ஆனால் தோல்வி யடைந்தாலும் சோர்வு அடைய மாட்டேன்."

பியாரேலால்.

# தமிழ் ஹரிஜன்

நவம்பர் 24 ஞாயிறு 1946


## என் நம்பிக்கைக்கு ஒரு சோதனை

அமெரிக்க அஸோஸியேடட் பிரஸ் ஸ்தாபனம் அனுப்பியுள்ள நிருபர் காந்தியடிகளிடம் சில கேள்விகள் கேட்டார். அந்தக் கேள்விகளும் அதற்குக் காந்தியடிகள் கூறிய பதில்களும் வருமாறு :—

கேள்வி :—இந்தியாவில் சமீபத்தில் மிக முக்கியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவை 1942 வருஷத்து எழுச்சி, இந்திய தேசீய ராணுவ இயக்கம், ராயல் இந்திய கடற்படைக் கலகம், கல்கத்தாவிலும் பம்பாயிலும் நடந்த குழப்பங்கள், காஷ்மீர் போன்ற இந்திய சமஸ்தானங்களில் நடைபெறும் இயக்கங்கள், சமீபத்தில் நடைபெற்ற வகுப்புவாத அக்கிரமங்கள் என்பனவாகும். இவைகளை எல்லாம் கவனிக்கும் பொழுது அஹிம்ஸையானது இந்திய வாழ்வில் வேரூன்றாத காரணத்தால் தங்களுடைய அஹிம்ஸாக் கொள்கை தோல்வி அடைந்து விட்டது என்று சொல்லலா மல்லவா ?

பதில் :—இப்படி பொதுப்படையாக முடிவு செய்வது அபாயகரமானதாகும். நீங்கள் கூறும் சம்பவங்களெல்லாம் ஹிம்ஸை கலந்தவை என்பதில் சந்தேகமில்லை, ஆனால் அதைக் கொண்டு அஹிம்ஸைக் கொள்கை தோல்வி அடைந்து விட்டதென்று ஒரு நாளும் சொல்ல முடியாது. சொல்லக் கூடியதெல்லாம் இன்னும் நான் பொதுஜனங்களுடைய மனதை மாற்றுவதற்குத் தேவையான முறை யொன்றைக் கண்டு பிடித்து விடவில்லை என்பதுதான். ஆயினும் இந்தியாவிலுள்ள 7 லக்ஷம் கிராமங்களில் இருந்து வரும் கோடிக் கணக்கான மக்கள் தாங்கள் குறிப்பிடும் ஹிம்ஸையில் கலந்து கொள்ளவில்லை என்று நிச்சயமாகக் கூறுவேன். அஹிம்ஸையானது இந்திய வாழ்வில் வேரூன்றி விட்டதா இல்லையா என்ற கேள்விக்கு இப்பொழுது பதில் சொல்ல முடியாது. என் மரணத்திற்குப் பின்பே பதில் சொல்ல முடியும்.

கேள்வி :—வீரர்கள் அனுஷ்டிக்கக் கூடிய அஹிம்ஸையை நம்மிடத்தில் உண்டாக்கிக் கொள்வதற்காக நாம் தினசரி வாழ்க்கையில் குறைந்த பட்சமாக அனுஷ்டித்துத் தீர வேண்டிய திட்டம் யாது?

பதில் :—வீரர்களின் அஹிம்ஸையை தம்மிடத்தில் உண்டாக்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் செய்து தீர வேண்டிய குறைந்த பக்ஷ காரியம் முதலில் தம்முடைய மனதிலிருந்து கோழைத்தனத்தை அறவே ஒழித்து விடுவதும் அதற்குத் தக்கதாக பெரிய காரியமோ சிறிய காரியமோ தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதுமேயாகும். உதாரணமாக அஹிம்ஸா பக்தர் தம்முடைய எஜமானர் கோபித்தால் தாம் கோபிக்காமலும் இருக்க வேண்டும், அவர் கூறும் அதர்மமான காரியங்களுக்கு அடி பணியவும் கூடாது. ஊதியம் எவ்வளவு அதிகமாகக் கிடைப்பதாயிருந்தாலும் தம்முடைய பதவியை இழந்துவிட தயாராயிருக்க வேண்டும். எத்தனை கஷ்டங்கள் வந்தபோதிலும் எல்லாவற்றையும் இழக்க நேரிட்டபோதிலும் எஜமானரிடம் எரிச்சல் உணர்ச்சி இல்லாதவராக ஆகிவிட்டால் அப்பொழுதுதான் அவர் வீரர்களுடைய அஹிம்ஸையை அடைந்தவர் ஆகின்றார். நானும் என் மகனும் ரயிலில் பிரயாணம் செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஒரு பிரயாணி என் மகனை அடிக்க வருகிறார். நான் அவர் செய்வது தவறென்று அவருக்கு எடுத்துக் காட்டுகிறேன். அவர் உடனே என்னை அடிக்க வருகிறார். அப்பொழுது நான் அவரிடம் எவ்விதத் துவேஷ உணர்ச்சியுமின்றி தைரியமாகவும் கம்பீரமாகவும் அவருடைய அடியை பெற்றுக் கொள்வேனேயாகில் அப்பொழுது தான் வீரர்களுடைய அஹிம்ஸையைக் கடைப்பிடித்தவனாவேன். இந்த மாதிரி உதாரணங்கள் தினந்தோறும் நம்முடைய வாழ்வில் எத்தனையோ காணப்படுகின்றன. கோபம் எழும்பொழுதெல்லாம் அடக்கிக் கொள்ளவும், திருப்பி அடிக்க சக்திபிருந்தாலும் திருப்பி அடிக்காமலிருக்கவும் முயன்று வந்தால் வீரர்களுடைய அஹிம்ஸை நம்மிடம் வளர்ந்துவரும். அந்த அஹிம்ஸை உடையவர்கள் ஒரு நாளும் அஞ்ச மாட்டார்கள். எவ்வளவு பெரிய பகைவர்களும் அவர்களுடைய வீரத்துக்கு அடிபணியாமலிருக்க மாட்டார்கள்.

### பிரிஜ் கிஷோர் பாபு

பிரிஜ் கிஷோர் பாபு வெகு நாட்களாக நோயாய் இருந்து நம்மை விட்டுப் பிரிந்து போனார். மகாத்மா காந்தியடிகளுக்குத் துணையாக உள்ள சத்தியாக்கிரக வீரர்களில் ஒருவர். சத்தியாக்கிரகப் போர் முறையில் நன்றாகப் பண் பட்டவர். பல முறை அதைக் கையாண்டவர். அவரை நினைத்த உடனே இந்தியாவில் நடை பெற்ற சத்தியாக்கிரகப் போர்களில் மிகக் கீர்த்தி பெற்ற ஒன்று ஞாபகத்துக்கு வருகின்றது. காந்தியடிகள் சம்பாரனில் பொது ஜன சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்திய பொழுது தான் அவர்கள் இருவரும் முதல் முதலாக சந்தித்தார்கள். அந்தக் காலத்தில் அவரைப் பற்றி அதிகமாக ஒருவருக்கும் தெரியாது. அது போலவே தான் ராஜ்குமார் சுக்லாவும் இருந்தார். ராஜகுமார் சுக்லா பிரிஜ் கிஷோர் பாபுவை சம்பாரனுக்குவரும்படி அழைத்தவுடன் பிரிஜ் கிஷோர் பாபு அங்கே சென்றார்.

சம்பாரனில் ஐரோப்பியர்கள் நீலித் தோட்டங்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள். அவைகளில் வேலை செய்த குடியானவர்கள் முறிச் சீட்டு எழுதிக் கொடுத்த அடிமைகளாகவே இருந்தார்கள். ஐரோப்பியர்களுடைய கொடுமையைத் தாங்க மாட்டாமல் எங்கும் கூக்குரல் கிளம்பிற்று. ஆனால் வெள்ளைக்கார வியாபாரிகள் பல மிகுந்தவர்கள். அத்துடன் வெள்ளைத் தோலென்ற விசேஷமான பயமும் உண்டாயிருந்தது. காந்தி யடிகள் அங்கே சென்றதும் போராட்டத்தில் இறங்குவதற்கு முன்னதாக அங்குள்ள தலைவர்களைக் கண்டு பேசினார். அங்கே பிரிஜ் கிஷோர் பாபுவைத் தவிர, ஐந்தாறு வக்கீல்களும் இயக்கத்தில் கலந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் ராஜேந்திர பாபு. அவர் அதற்குள்ளாக வக்கீல் தொழிலில் பெருமிதமான வெற்றி யடைந்திருந்தார். சீக்கிரமாக அவருக்கு ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவி கிடைக்குமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் எல்லோரும் பிரிஜ் கிஷோர் பாபுவையே தங்கள் தலைவராக எண்ணினார்கள்.

ஒரு நாள் இரவு முழுவதும் விவாதித்த பின்னர் பிரிஜ் கிஷோர் பாபுவும் அவருடைய சகாக்களும் காந்தியடிகளுடைய யோஜனைப்படி நடக்க முடிவு செய்தார்கள்.

அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது :—

“ஆனால் நீங்கள் உங்களை வக்கீல்களாகவோ தலைவர்களாகவோ எண்ணிக் கொள்வதை விட்டுவிட வேண்டும். நீங்கள் ஒன்றைப் பார்த்து ஒன்று எழுதுவோ

ராகவும், மொழி பெயர்ப்போராகவும் ஆகிவிட வேண்டும். மொழி பெயர்ப்பதும் வியாக்யானம் செய்வதுமே உங்கள் முக்கியமான வேலை.”

அதற்கு பிரிஜ் கிஷோர் பாபு தம்முடைய சகாக்களின் சார்பாக “நாங்கள் யோசித்துச் சொல்கிறோம்” என்று சொன்னார்.

மறு நாள் அவர் தங்களுடைய முடிவை காந்தியடிகளிடம் தெரிவித்தார். அது முதல் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

சில நாட்களுக்கு முன் காந்தியடிகள் பிரிஜ் கிஷோர் பாபு இறந்து விட்ட செய்தியைக் கேட்டதும் அவருடைய குடும்பத்தார்க்கு அனுதாபச் செய்தி அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக பிரிஜ் கிஷோர் பாபுவை கருணை பொருந்திய எமதர்மன் நோய்த்துன்பத்திலிருந்து விடுவித்து விட்டதற்காக அவர்கள் சந்தோஷப்பட வேண்டுமென்று அவர்களுக்குத் தந்தியனுப்பினார். எண்ணித் துணிவார். துணிந்த பின் எண்ண மாட்டார். அவருக்கு காந்தியடிகளிடமிருந்த பக்தி அபாரமானது. ஸ்ரீமதி பிரபாவதி அவருடைய மகள். அவள் திரு. ஜயப் பிரகாஷ் நாராயணனுடைய மனைவியாராக ஆவதற்கு முன்பே அவரை பிரிஜ் கிஷோர் பாபு சபர் மதி ஆசிரமத்துக்கு அனுப்பி வைத்தார். அந்த அம்மையார் காந்தியடிகளுடைய சொந்த மகளைப் போல் ஆய் விட்டார். பிரிஜ் கிஷோர் பாபு பீஹார் வானத்தில் பிரகாசிக்கும் பெரிய நக்ஷத்திரங்களில் ஒன்றாவார். அவருடைய ஞாபகம் என்றென்றும் போற்றப்படும்.

ஸோட்பூர் — 30-10-46 — பியாரேலால்

## கலப்பையா ? மெஷினா ?

மெஷின் கலப்பை கொண்டு பயிர் செய்வது வேண்டுமா வேண்டாமா என்று தர்க்கம் நடந்து கொண்டிருக்கிறது. மெஷின்களைக் கொண்டு விவசாயம் செய்வதே இந்தியாவுக்கு ஏற்ற லக்ஷ்யமாகுமென்று சிலர் எண்ணுகிறார்கள். சிலர் மெஷின் கலப்பையை கண்ணால் பார்க்கக் கூட மாட்டேன் என்று சொல்கிறார்கள்.

ஆனால் இப்பொழுது இந்தியாவில் க்ஷீண நிலையிலுள்ள விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய காலம். ஆதலால் இரண்டு முறையையும் தழுவிய ஒரு முறையை கையாளவேண்டுமென்றே எண்ணுகிறேன்.

ஐக்கிய மாகாணத்தில் பயிர் செய்யக் கூடியதாகவுள்ள தரிசுநிலங்கள் 79 லக்ஷம் ஏக்கர் ஆகும். இதில் பெரும்பாகம் கல் போல் மிகக் கடினமாக உறைந்து போயிருக்கிறது. ஆழமாக உழுதால் தான் பயிர் செய்ய முடியும். சில தரிசு நிலங்களில் ஆழமாக வேர் போகக் கூடிய உயரமான புல் வகைகள் உண்டாயிருக்கின்றன. சில தரிசு நிலங்களில் சிறு மரங்களும் புதர்களும் அடர்ந்து கிடக்கின்றன.

பல வருஷங்களாக இந்தியாவிலுள்ள கால் நடைகள் க்ஷீணித்து வருகின்றன. சமீபத்தில் நடந்த யுத்தத்தில் அதன் தொகை அஞ்சக் கூடிய அளவு அதிகமாக குறைந்து விட்டது. அந்நிய நாட்டுத் துருப்புகளாகிய ஆங்கிலேயருக்கும், அமெரிக்கருக்கும் யுத்தத்தில் கைதியான இத்தாலியர் முதலியவர்களுக்கும் ஆகாரமாக நம்முடைய கால் நடைகளை ஏராளமாக வெட்டி வந்தார்கள். ஆதலால் தரிசுநிலங்களை மாடுகள்பூட்டிய கலப்பைகளைக் கொண்டு உழுது, பண்படுத்தி பயிர் செய்வதென்பது சீக்கிரமாக நடக்கக் கூடிய காரியமில்லை. அதனால் எவ்வித உபயோகமும் உண்டாக மாட்டாது. நம்முடைய நாட்டுப் புறங்களில் ஜனங்கள் நாளுக்குநாள் அதிக கேவலமாக ஆகிக்கொண்டு வருகிறார்கள். அதை சீக்கிரமாக தடுக்க வேண்டுமானால் வேறு முறையை அனுஷ்டித்தாக வேண்டும். ஆதலால் தரிசு நலங்கள் எங்கே அதிகமாக இருக்கின்றனவோ, அங்கே அவைகளை வெட்டித் திருத்துவதற்கு மெஷின் கலப்பைகளை உபயோகிப்பதே நல்லதென்று எண்ணுகிறேன். வெட்டித்திருத்திய பின்னரும் மெஷின் கலப்பைகளை சாசுவதமாக வைத்துக் கொள்ளும்படி நான் யோசனை சொல்ல மாட்டேன். இந்தியாவில் மாடுகளைக் கொண்டு உழுவது தான் அதிகச் செலவில்லாமல் நடக்கக் கூடியது. மாட்டுக்கு நிலத்தில் பயிராகும் தானியங்களையும் வைக்கோலையுமே உணவாகக் கொடுக்கலாம். அது அதற்குப் பதிலாக உபயோகமான சாணத்தைக் கொடுக்கிறது. அது வீட்டை மெழுகுவதற்கும் விறகாக எரிப்பதற்கும் உரமாக உபயோகிப்பதற்கும் பயன் படுகிறது. அத்துடன் மாடுகள் வண்டி இழுக்கவும் தண்ணீர் இறைக்கவும் உதவுகின்றன. மெஷின் கலப்பையை உபயோகித்தால் அதை ஓட்டக் கடையிலிருந்து அதிக விலை கொடுத்து எண்ணெய் வாங்க வேண்டும். அதன் வயிற்றிலிருந்து எதுவும் பிரதி பலனைக் கிடைப்பதில்லை. அது மட்டுமன்று. அதன் உபயோகமெல்லாம் அதிகமான நிலம் ஒரே பரப்பாக உள்ள இடத்தில் பயிர் செய்வதற்கு மட்டுந்தான்.

விறகுக்காக கிராமங்களில் மரங்களை வைத்து உண்டாக்கி விட்டால் விறகாக எரிக்க மாட்டுச் சாணம் தேவையில்லையல்லவா? என்று கேட்கக் கூடும். ஆனால் விறகுக்காகத் தேவையில்லா விட்டாலும் செழுமை இழந்து நிற்கும் நம்முடைய நிலங்களுக்கு ஏராளமாகச் சாண உரம் தேவையாகும். தவிரவும் சாண மானது இந்திய கிராமாந்திர வாழ்க்கையில் ஒரு முக்கியமான அம்சமாக இருந்து வருகிறது என்பதை மறக்கக் கூடாது.

ஆகவே மெஷின் கலப்பைகளை தரிசாக இருக்கும் நிலங்களை வெட்டித் திருத்துவதற்காக மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்பது தெளிவாகும். அந்த நிலங்கள் சரியான விதத்தில் மாசூல் தர ஆரம்பிக்கும் வரையில் கால் நடைகளை அபிவிருத்தி செய்ய நல்ல முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் பிறகு பயிர் செய்வதற்கு போதுமான மாடுகள் கிடைத்துவிடும்.

மெஷின் கலப்பைகளைப் பற்றி ஒரு எச்சரிக்கை கூற விரும்புகின்றேன். இப்பொழுது அவைகள் அயல் நாடுகளிலிருந்து வருகின்றன. அதனால் அவைகளில் ஏதேனும் ஒருபாகம் பழுதாகி விட்டால் புதிதாக வாங்கிப்போட முடியாமலிருக்கிறது. முடிந்தாலும் அதிக விலை கொடுக்க வேண்டிருக்கிறது. அத்துடன் அவைகளை ரிப்பேர் செய்வதற்கு வேண்டிய திறமையுள்ள எஞ்சினீயர்களைக் காண்பது கஷ்டமாயிருக்கிறது. ஆதலால் தரிசு நிலங்களை மெஷின் கலப்பைகளைக் கொண்டு வெட்டித்திருத்த ஆரம்பிப்பதற்கு முன் அதற்கு வேண்டிய தொழிலாளர்களுக்கு தக்க பயிற்சி கொடுக்கவும் மெஷின் கலப்பைகளை உற்பத்தி செய்யவும் பழுது பார்க்கவும் கூடிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும் வேண்டும்.

மெஷின் கலப்பைகளைக் கொண்டு பயிர் செய்யும் விஷயத்தில் கஷ்டமான அம்சம் யாதெனில் மெஷின் கருவிகள் தான். அவைகள் அடிக்கடி ஒடிந்து போகும் அல்லது வேலை செய்யாமல் நின்றுபோகும். அந்தக் கருவிகளுக்காக அயல்நாடுகளை நம்பி நின்றால் மெஷின்களைக் கொண்டு செய்யும் விவசாயம் முன்னேறமாட்டாது. மெஷின் கலப்பைகளை இந்தியாவில் செய்ய முடியும். அப்படி இருக்க அவைகளை இங்கே செய்யாமல் அயல் நாட்டிலிருந்து தருவித்

தால் அது நம்முடைய சுதேச உணர்ச்சிக்கு ஒரு களங்கமாகும்.

எஸ்.

## கதரின் பொருளாதாரம்

டாக்டர் பி. எஸ். லோகநாதன் என்னும் பொருளாதார நிபுணர் நடத்தும் "கீழ் நாட்டு பொருளாதார விஞ்ஞானி" என்ற பெயருள்ள சஞ்சிகையில் "கதர்ப் பொருளாதாரம்" என்று ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. அதில் பல புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள 40-கோடி மக்களுக்கும் தேவையான கதரை உற்பத்தி செய்வதற்கு கைராட்டினங்களை உபயோகப்படுத்தும்படி செய்து விட்டால் ரயில்வே போலீஸ், கல்வி முதலிய இன்றி அமையாத காரியங்களைச் செய்வதற்குப் போதுமான ஆட்கள் கிடையாமல் போகுமென்று நிரூபிக்க அந்தக் கட்டுரை முயல்கின்றது.

அதன் முடிவு கீழ்வருமாறு :—

"விவசாயம் செய்யாத காலங்களில் உபத்தொழிலாக மேற்கொள்வதற்கு கைராட்டினம் மிகவும் ஏற்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேச முழுவதற்கும் அதைப் பொருளாதாரத் திட்டமாக அமைத்தால் தேசம் பாப்பராகப் போய் விடும்."

இந்த முடிவுக்கு ஆதாரமாகக் கூறப்படும் வாதங்கள் கீழ்வருமாறு :—

(1) ஆள் ஒன்றுக்கு 20-சதுரகெஜத் துணி வேண்டுமென்று வைத்துக்கொண்டால் இந்தியா முழுவதற்கும் எண்ணூறு கோடி சதுர கஜதுணி தேவையாகும்.

(2) இந்தத்துணிக்கு வேண்டிய நூலை நூற்பதற்கு 3½-கோடி தொழிலாளர்கள் தேவை.

(3) ஒரு தொழிலாளி தினந்தோறும் 8 மணிநேரம் வேலை செய்து 2¼-கெஜம் துணி நெய்வதாக வைத்துக்கொண்டால் சுமார் 18-கோடி நெசவாளர்கள் தேவையாகும்.

(4) பருத்தியைப் பஞ்சாக அரைப்பதற்கும் வெட்டுவதற்கும் சேர்ந்து சுமார் ½-கோடி பேர் தேவையாகும். ஆகவே கதர் உற்பத்திசெய்யமொத்தம் 5-கோடி ஜனங்கள் தேவை.

அத்துடன் வருஷந்தோறும் 330-லட்க்ஷம் கைராட்டினங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்காக லட்சக் கணக்கான தச்சர்கள் தேவை. 5-லக்ஷம் கைத்தறிகள் செய்ய 30-லக்ஷம் தச்சர்கள் வேண்டும். 400-ராத்தல் பருத்திகொண்ட 50-லக்ஷம் பொதிகள் வேண்டும். இவ்வளவு பருத்தியையும் உற்பத்தி செய்யவும் சேகரிக்கவும் பிற இடங்களுக்கு அனுப்பவும் ஏராளமான ஆட்கள் வேண்டும். ஆகவே துணிக்காக 7-கோடிப்பேர் அதாவது மொத்தம் ஜனத்தொகையில் 18-சதமானவகள் வேலை செய்ய வேண்டி யிருக்கிறது.

மொத்தம் ஜனத்தொகையில் வேலை செய்யக் கூடிய சக்தி யுடையவர்கள் 40-சதமானம். அதாவது 16-கோடி. கதர் உற்பத்தி செய்ய இந்தப் 16-ல் 7-போனால் மற்ற வேலைகளை எல்லாம் செய்ய 9-கோடிப் பேர்தான் மிஞ்சுவார்கள். ஆனால் விவசாயத்திற்கே 11-கோடிப் பேர் தேவையாயிருக்கிறது. ஆகவே வேலை செய்யக்கூடிய சக்தியுடையவர்கள் எல்லோரும் உணவையும் உடையையும் உண்டாக்குவதற்கே உபயோகப்பட்டுப் போவார்கள். அப்படியானால் மற்றக் காரியங்களைச் செய்வோர் யார்?

இந்த வாதங்களுக்கு நான் கூறும் பதில் இது :—

முதலில் நெசவைக் கவனிப்போம். நெசவு செய்வதற்கு 1¼ கோடி நெசவாளர்கள் தேவை என்று கட்டுரை எழுதியவர் கூறுகிறார். நெசவாளர்க்கு உதவி செய்வோர் எல்லோரையும் சேர்த்தால் இந்த தொகை சரியானது தான். ஆனால் யுத்தத்திற்கு முன்பு கூட இந்தியாவில் 1 கோடி நெசவாளர்கள் இருக்கவே செய்தார்கள். அதனால் நெசவு செய்வதற்கு அதிகமான ஆட்கள் தேவைப்பட்டு விடும் என்று கூறும் வாதம் பொருந்தாது. தவிரவும் இப்பொழுது நெசவாளர்கள் தங்களுக்கு வேண்டிய நூல் கிடையாமல் தவிக்கிறார்கள் கதர் உற்பத்தி செய்தால் இவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைத்து விடும்.

கைராட்டினங்கள் கைத்தறிகள் செய்வது சம்பந்தமாக கூறும் வாதத்திற்கும் இதுதான் பதில். இப்பொழுதே இந்தியாவில் தேவையான ராட்டினங்களும் கைத்தறிகளும் இருந்து கொண்டிருக்கின்றன. உடனடியாக புதிதாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை. அத்துடன் ஒரு கைராட்டினம் ஆயுள்கால முழுவதும் உழைக்கும். ஆரம்பத்தில் புதிதாக ராட்டினங்கள் செய்ய வேண்டி இருந்தாலும் வருஷந்தோறும் லட்சக் கணக்காக செய்ய வேண்டிய அவசியம் ஒரு நாளும் கிடையாது. இந்த தச்சர்களுக்கும் இப்பொழுது முழுநேரமும் வேலை கிடைப்பதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் கைராட்டினங்கள் சுழலவும் கைத்தறிகள் ஓடவும் செய்தால் இவர்கள் எல்லோருக்கும் நிச்சயமாக முழுநேரமும் வேலை செய்ய வேலை கிடைத்துவிடும்.

800 கோடி சதுர கெஜம் கதர்த் துணி உற்பத்தி செய்வதற்காக பருத்தியை புதிதாக உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. 55 லட்சம் பருத்திப் பொதிகள் உண்டாக்க வேண்டியதற்கும் சேகரிப்பதற்கும் ஆட்கள் தேவை என்ற வாதம் வேண்டியதில்லை. இப்பொழுதே 60 லக்ஷம் பொதி பருத்தி உண்டாய்க் கொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொரு கிராமமும் தனக்குப் போதுமான பருத்தியை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்பது தான் நம்முடைய கதர்த் திட்டம். நம்முடைய திட்டப்படி செய்தால் பெரிய மில்களுக்கு பருத்தியைக் கொண்டு போகவும் அதை அரைக்கவும் அதை பேலாக கட்டவும் வேண்டிய அவசியமில்லை.

பருத்தியை அரைப்பதற்கும், வெட்டுவதற்கும். நூற்பதற்கும் 4 கோடி பேர் தேவையென்று கட்டுரையாளர் கூறுகிறார். ஆனால் தினந்தோறும் 8 மணி நேரம் வேலை செய்வது என்பது நம்முடைய கதர்த் திட்டத்தில் கிடையாது. நம்முடைய கதர்த் திட்டப்படி வேறு வேலை இல்லாத நேரங்களில் தனக்கு வேண்டிய அளவு மட்டுமே நூற்கப்படும். ஒவ்வொருவரும் ஓய்வு நேரத்தில் தினந்தோறும் அரை மணி நேரமாவது நூற்க வேண்டுமென்று கூறுகிறோம். வேலை செய்யக் கூடிய சக்தியுடைய 16 கோடிப் பேரும் அப்படிச் செய்தால் தினந்தோறும் 8 கோடி மணிநேரம் நூற்க முடியும்.

பாக்கியுள்ள 24 கோடி பேரில் கிழவர்களையும் நோயாளிகளையும் சிறு குழந்தைகளையும் நீக்கிவிட்டால் 12 கோடி பேராவது தினந்தோறும் 1 மணி நேரம் நூற்க முடியும். அப்படிச் செய்தால் அவர்கள் தினந்தோறும் 12 கோடி மணிநேரம் நூற்பார்கள்.

வருஷத்தில் 3 மாத காலம் வேலை இல்லாமலிருக்கும் 11 கோடி விவசாயிகளும் தினந்தோறும் அதிகப்படியாக 2 மணிநேரம் நூற்றால் அவர்கள் தினந்தோறும் 22 கோடி மணிநேரம் நூற்பார்கள்.

மேற்கண்ட 12 கோடி பேர் தங்கள் ஓய்வு நேரத்தில் அதிகப்படியாக தினந்தோறும் 1 மணிநேரம் நூற்பதாயிருந்தால் அவர்கள் தினந்தோறும் 12 கோடி மணி நேரம் நூற்பார்கள்.

ஆகவே உடல் பலமுள்ளவர்கள் 8 கோடி மணி நேரம்; விவசாயிகள் 22 கோடி மணிநேரம்; மற்றவர்கள் 24 கோடி மணிநேரம் ஆக மொத்தம் 54 கோடி மணிநேரம் நூற்க முடியும்.

ஆனால் கட்டுரையாளர் கணக்குப்படி 4 கோடி பேர் தினந்தோறும் 8 மணிநேரம் நூற்றால் தினந்தோறும் மொத்தம் 32 கோடி மணிநேர வேலைதான் கிடைக்கிறது.

ஆதலால் கதர் திட்டப்படி நூல் நூற்றால் புதிதாக ஆட்கள் தேவைப்படாமலே நமக்கு வேண்டிய நூலுக்கதிகமாக ஓய்வு நேரங்களில் எளிதாக நூற்றுவிட முடியும்.

ஆகவே மற்ற அவசியமான காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டுள்ள மக்களை அவற்றை விட்டு விட்டு கதர் உற்பத்தியில் ஈடுபடும்படி சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது மட்டுமன்று. இப்பொழுது மில்களில் பஞ்சு அரைக்கவும் வெட்டவும் திரிக்கவும் செய்துவரும் 10 லட்சம் ஜனங்களும் வேறு வேலைகளில் ஈடுபடுவதற்காக கிடைப்பார்கள்.

இறுதியாக இந்தியாவின் பொருளாதார அமைப்பு கதர் அஸ்திவாரத்தின் மேலேயே கட்டப்பட வேண்டும். ஒரே இடத்தில் செய்து குவிக்கும் பெரிய மில்களை ஆதாரமாகக் கொண்டால் இந்தியாவிலுள்ள கிராமங்களுக்கு சமாதானமோ, க்ஷேமமோ, செழிப்போ உண்டாக மாட்டா.

கதர்த் துணி மில் துணியைப் போல் அழகாயில்லை, அதிக நாள் நிற்பதில்லை, அதிக விலையாயிருக்கிறது என்ற ஆட்சேபணைகளுக்கு முன்னாலேயே பதில் சொல்லி இருக்கிறபடியால் இப்போது மறுபடியும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கிருஷ்ணதாஸ் காந்தி.

## ஏழை நாடுகள் செய்யக்கூடியது யாது?

### (1)

சேனையில் ஆயுதங்கள் எல்லாம் நாளுக்கு நாள் மெஷின் மயமாய் வருவதால் சிறிய தேசங்களும் ஏழை தேசங்களும் உயிருடனிருக்க முடியாது என்று ஆங்கில ஆசிரியர் ஒருவர் 1940-வருஷத்தில் எழுதினார்.

அவர் கூறியதாவது:—"எப்படிக் கொல்லர்களுடைய உலைக்கூடங்கள் கண்காட்சிப் பொருள்கள் போல் இருந்து வருகின்றனவோ அப்படியே தான் இனிமேல் சிறிய தேசங்களும இருந்து வரும். இனிமேல் பெரிய தேசங்கள் தான் உலகத்தில் இருக்க முடியும். அந்தத் தேசங்கள் தான் பீரங்கித் தொழிற்சாலைகளையும் பெரிய கப்பல்படையையும் வைத்துக் கொள்ள முடியும். சிறிய தேசங்களில் ஆயுதங்கள் எல்லாம் மண்பாண்டங்கள் மாதிரிதானிருக்கும். பெரிய நெருக்கடி ஏற்பட்டால் பெரிய தேசங்கள் உதவியின்றி வாழ முடியாது. ஆகவே விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக ஆயுதங்கள் செய்யப்பட்டதிலிருந்து சிறிய தேசங்களும் கைத்தொழிலபிவிர்த்தியில்லாத தேசங்களும் பலயீனமடைந்து விட்டன."

ஆஸ்வால்ட் ஸ்பெங்லர் என்பவர் கூறுகிறார்:-"ராணுவ பலமானது கைத்தொழில் அபிவிர்த்தியையே பொறுத்திருக்கிறது. கைத்தொழில் விஷயத்தில் வறுமையான தேசங்கள் சகல விஷயங்களிலும் வறுமையானவைகளாகவே இருக்கின்றன. அதனால் சேனை வைத்துக் கொள்ளவும் முடியாது, போர் தொடுக்கவும் முடியாது, ஆதலால் அரசியல் விஷயத்தில் ஆண்மையற்றவைகளாக இருக்கின்றன. இதர தேசங்களுக்கு அடிமையான நிலைமைதான்"

### (2)

இந்தக் காரணத்தால்தான் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னரே சிலர் அரசியல் பொருளாதார நிலைமையை உத்தேசித்து உலகத்தைச் சில பெரிய பகுதிகளாகப் பிரித்துவிட வேண்டும் என்று எண்ண ஆரம்பித்தார்கள்.

அப்படியானால் சிறிய தேசங்கள் எல்லாம் பெரிய தேசங்களுக்கு அடிமையாக ஆய்விட வேண்டியதுதானா? அந்த நிலைமைதான் தோற்றுப் போன தேசங்களுக்கும் மத்திய ஐரோப்பாவிலுள்ள சிறிய தேசங்களுக்கும் உண்டாயிருக்கின்றது. காந்தியடிகள் இதைத் தீர்க்கதரிசனமாக 1938-ம் வருஷத்திலேயே எழுதினார் :—

"ஐரோப்பாவில் சிறிய தேசங்கள் தலை எடுக்க முடியாது என்று தோன்றுகிறது. பெரிய தேசங்களுடன் ஐக்கியப்பட்டு விட வேண்டியதுதான். ஆம் அவைகளுக்கு அடிமையாய் விட வேண்டியது தான்."

இந்த சிறிய தேசங்கள் யுத்தத்தில் எவ்விதம் சமாளித்துக் கொள்ள முடியும்? கன்தர் என்னும் ஆங்கில ஆசிரியர் கூறுகிறார் :—

"கைத்தொழில் அபிவிர்த்தி அதிகமாக ஏற்பட்டுள்ள தேசங்கள் தான் போதுமான அளவு போர்க்கருவிகளை உற்பத்தி செய்ய முடியும். இந்த தேசங்கள் அவைகளைச் சிறிய தேசங்களுக்கு விற்கும். உலகத்தில் காணப்படும் போர்க் கருவிகள் எல்லாம் 10 பெரிய தேசங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன"

இங்கிலாந்தும் ருஷ்யாவுங்கூட அமரிக்காவின் உதவியின்றி ஆயுதங்கள் உபயோகிக்க முடியவில்லை. ஆயுதத்திற்கு பணம் கொடுக்க வேண்டும், நேச நாடுகளானாலும் சும்மா கொடுத்து விடுவதில்லை.

அத்துடன் அடிக்கடி புதுப்புது ஆயுதங்கள் வாங்க வேண்டியதும் அவசியமாகும். சிறிய தேசங்கள் உபயோகிக்கும் சாதாரணக் கைத்துப்பாக்கியானது இப்போது மெஷின் துப்பாக்கி வந்த பொழுது வெறுங் கைத்தடிகள் போன்றது தான்.

கால்வின் காடார்ட் கூறுகிறார் :—

"காலாட் படைக்கும் குதிரைப் படைக்கும் இப்பொழுது மெஷின் ஆயுதங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆதியில் காலாட் படைகள் வெறும் ஈட்டியையே உபயோகித்து வந்தன. பிறகு ரவைத் துப்பாக்கி, அதன் பிறகு குண்டுத் துப்பாக்கி உபயோகிக்க ஆரம்பித்தார்கள். 1940-ம் வருஷத்தில் அமெரிக்கக் காலாட் படைகளுக்கு மெஷின் துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. ஆகவே எல்லாம் புத்தம் புதியதாக ஆகிக் கொண்டு வருகின்றன."

இப்படி அடிக்கடி புதுப்புது ஆயுதங்கள் வாங்க வேண்டியிருப்பதால் எவ்வளவு பணம் தேவை என்பதை அமெரிக்கா தேசம் போர்க் கப்பல்கள்மீது வெடிகுண்டு போடுவதற்காக எவ்வளவு பணம் செலவு செய்தது என்பதைக் கவனித்தாலே போதும்.

பால் ஜாண்ஸ்டன் கூறுகிறார் :—

“ அமெரிக்கக் கடற் படையானது கடல்களில் நடக்கும் அட்டகாசங்களைக் கண்டதும் தன்னிடமுள்ள குறைகளை நீக்கி புது விதமான ஆயுதங்களை உண்டாக்கிக் கொள்வதற்காக 30 கோடி டாலர் பணம் கேட்டுப் பெற்றது.”

இவ்வளவு பெரிய செலவை இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற தேசங்கள் கூடச் செய்ய அஞ்சும்பொழுது எந்தச் சிறிய தேச மேனும் அதை எண்ண வேனும் முடியுமா ?

(3)

சரி, ஆயுதங்களை வாங்கி விட்டாலும் போதாது, அவைகளை உபயோகிப்பதற்காக திறமையும் வேண்டு மல்லவா ? அதை ஒரே நாளில் பெற்றுவிட முடியாது. தற்காலத்தில் செய்யப்படும் போர்க் கருவிகளைச் சரியானபடி உபயோகிக்கத் தெரியாததால் என்ன பயன் உண்டாகும் என்பதை ஹால்டோர் ஹான்ஸன் என்பவர் கீழ்கண்டவாறு கூறுகிறார் :— “ சைனா யுத்தத்தில் ஜப்பான் 700 ஆகாய விமானங்களைத்தான் இழந்தது. ஆனால் சைனாவோ 1,100 வெடிகுண்டு எறியும் விமானங்களை இழந்துவிட்டது. இப்படி அதிகமாக இழக்க நேரிட்டதற்கு முக்கியமான காரணம் ஆகாய விமானிகளுடைய திறமைக் குறைவுதான். அமரிக்காவிடமிருந்து வாங்கிய வெடி குண்டு விமானங்களைச் சீன விமானிகள் அமரிக்காவிலிருந்து ஓட்டிக்கொண்டு போனார்கள். ஆனால் அவர்கள் இறக்கும் பொழுது என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய மறந்து விட்டார்கள். அதனால் சகல விமானங்களும் பழுதாய் விட்டன.”

(4)

இன்னுமோர் விஷயம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சிறிய தேசங்கள் பணம் கொடுக்கத் தயாரா யிருந்தாலும் வேண்டும்போது பெரிய தேசங்களிடமிருந்து ஆயுதங்களை வாங்கிவிட முடியாது. இத்தாலிய தேசம் அபிஸீனியாமீது படையெடுத்த பொழுது அபிஸினியாவுக்கு ஆயுதங்கள் வாங்க முடியமாற் போயிற்று. குடியரசு ஸ்பெயின் இங்கிலாந்திலிருந்தும் பிரான்ஸிலிருந்தும் ஆயுதங்கள் பெற முடியவில்லை. அதற்கு விரோதமானவர்களுக்கோ ஜெர்மனியும் இத்தாலியும் அனுப்பிவைத்தன. அமரிக்கா சேர்ந்தபின்தான் சைனாவுக்கு ஆயுதங்கள் அமரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் கிடைத்தன. ஆயுதங்கள் செய்யும் தேசங்கள் பெரிய தேசங்களுக்கு விரோதமாக நடப்பதில்லை. அதனால் தான் அபிஸினியாவும் குடியரசு ஸ்பெய்னும் தோல்வி அடைந்து விட்டன.

ஸ்ரீமதி ஷியாங்கே ஷேக் மிக்க வருத்தத்துடன் கூறுகிறார் :—

“நாங்கள் தோல்வி யடைந்தால் அது எங்களுக்கு மட்டும் தோல்வியன்று, உலகத்திலுள்ள ஜயநாயக நாடுகள அனைத்துக்கும் தோல்வி தான். அப்படி நாங்கள் தோல்வி யடைந்தால் அதற்குக் காரணம் எங்கள் வீரக்குறைவாகாது, பிரிட்டிஷார் ஜப்பானைத் திருப்தி செய்ய முயல்வதும் அமரிக்கர் கொள்ளை லாபம் அடிப்பதும் பிராஞ்சியர் அஞ்சுவதும் தான் எங்கள் கழுத்தை நெரித்து வருகின்றன.”

(5)

ஆயுதங்களுக்குப் பணம் கொடுத்தால் மட்டும் போதாது. பால்கன் நாடுகளைப் பார்த்தால் விஷயம் விளங்கும். பிரிட்டிஷ் பாங்குகளும் அமரிக்க பாங்குகளும் பால்கன் நாடுகளுக்கு உதவி செய்யாமல் போன பொழுது, அந்த நாடுகள் ஜெர்மனிக்குத் தங்கள் உணவுப் பொருள்களை விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஜெர்மனி கொஞ்சம் பணம் கொடுத்து விட்டுப் பாக்கிப் பணத்துக்கு போர்க் கருவிகள் மிக மலிவான விலைக்குத் தருவதாகச் சொல்லிற்று. உடனே பால்கன் நாடுகளுக்கு அவைகளை வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அத்துடன் வேண்டாம் என்றால் ஜெர்மனி தங்கள் உணவுப் பொருள்களை வாங்காமற் போய்விடுமோ என்ற பயமும் உண்டாயிற்று.

இதைக்குறித்து ஆங்கில ஆசிரியர் ஒருவர் எழுதுகிறார் :—“ டாக்டர் ஷார்ட் என்னும் ஜெர்மன் ராஜதந்திரி இவ்விதம் போர்க்கருவிகளை வாங்கும்படி சிறிய தேசங்களை நிர்ப்பந்தித்ததால் அரசியல் துறையும் ராணுவத் துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன. இந்தச் சிறு தேசங்கள் ஜெர்மனியிடம் ஆயுதங்களை வாங்கியதால் மறுபடியும் அவைகளை வாங்குவதற்கு ஜெர்மனியையே எதிர்ப்பார்த்து நிற்க வேண்டிய நிலைமை உண்டாய்விடுகின்றது. ஜெர்மன் பீரங்கிவாங்கினால் அதில்பழுதாய்ப்போகும் பாகங்களை ஜெர்மனியிடமிருந்துதானே வாங்கமுடியும் ? இந்தவிதமாக அரசியல் அடிமை நிலைமை உண்டாய்விடுகின்றது.”

(6)

ஆகவே எந்த விதத்தில் பார்த்தாலும், போர்செய்ய வேண்டுமானால், சிறிய தேசங்கள் மெஷின் ஆயுதங்களை உற்பத்திசெய்யும் பெரிய தேசங்களையே எதிர்பார்த்து நிற்க வேண்டியவைகளாக இருக்கின்றன. சிலசிறிய தேசங்கள் தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகபெரிய தேசங்களை எதிர்பார்த்து நின்றன. ஆனால் அவைகளுடைய வீரமும் தீரமும் அணுவளவும் பயன்படவில்லை, சிறிய தேசங்கள் காணப்படுவதற்கு காரணம் அவைகளுள்ள இடமும் பெரிய தேசங்களிடை பரஸ்பரம் காணப்படும் பொறாமைகளுமே யாகும். ஆகவே யுத்தம் என்றால் நியாயம் ஜெயிப்பதில்லை, பலம் தான் ஜெயிக்கின்றது.

ஸி. எஸ்.

## ஸிந்தி மொழியிலுள்ள ஒரு பாடல்

உம்முடைய மாளிகை அழகாயிருக்கிறது.

நீர் சகலமும் அறிபவர்.
நட்சத்திரங்கள் பிரகாசிக்கும் வானைப்
பார்த்தால் நீர் அங்கே இருக்கிறீர்.

நீரே வானத்தில் தோன்றும் சந்திரன்.
சந்தையில் காணப்படும் மக்களுடைய
உயிரும் நீரே.

கோயில்களிலுள்ள விக்கிரகங்களிலும்
இருக்கிறீர்.

கல்லிலும் நாங்கள் உம்மைக் காண்கின்றோம்.
கடலில் முழங்கிவரும் அலைகளிலும் நீர்
இருக்கிறீர்.

கடலில் செல்லும் கப்பலின் மாலுமியும் நீரே.

எல்லா யிடங்களிலும் உம்மைக் காண்பதால்
மனிதன் உம்மையே தொழுகின்றான்.

உம்மைத் தொழுவதால் எல்லாம் பெற்று
விடுகிறோம்.

பியாரேலால்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை,
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை